Registered No. M. 4018

ஸ்ரீ தன்வந்தரயே நம:

வைத்திய சந்திரிகா.

தமிழ்நாடு ஆயுர்வேத மகாமண்டலத்தின்

மாதப்பத்திரிகை.

பிரதி ஆங்கிலமாதம் முதல்வாரத்தில் வெளிவரும்

Vol. 8 | June 1946 | No. 6

ஆசிரியர்:—V. B. சுடராஜ சாஸ்திரி, ஆயுர்வேதாசார்ய,
வைத்திய விசாரத, வைத்திய வாசஸ்பதி,
திருச்சிராப்பள்ளி.

Published by Pandit S. Narayana Aiyangar,
Madura.

விஷய சூசிகை. பக்கம்

ஸ்ரோஷ்ரு சீர்ஷம்—Dr. T. S. சுப்பிரமணிய அய்யர் L. I. M. திருச்சி 1—9

லோஹங்கள்—சிரோமணி. S. V. ராதாகிருஷ்ணை சாஸ்திரிகள் தஞ்சாவூர் 9—15

Printed by Venkateswar Press, Madura, Paper, ...
Issue Card M. D. No. 112, 1-6-46, 150 copies.

குறிப்பு.

வைத்தியசக்திரிகையில் பிரசுரம் செய்யவேண்டிய விஷயங்கள் கட்டுரைகள் முதலிய அனுப்பவேண்டிய விலாஸம்.

வைத்தியசந்திரிகா—ஆசிரியர்,

C/o ஆத்ரேய ஆயுர்வேதிக் ஒர்க்ஸ்,

தென்னூர் ரோடு, திருச்சிறுப்பள்ளி.

வைத்தியசந்திரிகையின் சந்தா, விளம்பர விகிதங்கள் மற்றும் தமிழ்காடு ஆயுர்வேத மஹாமண்டலத்தில் ஸகல விஷயங்களையும் பற்றி எழுதவேண்டிய விலாஸம்:—

வைத்யவாசஸ்பதி, பண்டிட் P. S. ராமசர்மா.

பொதுக்கார்யதர்சி,

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலம்.

கரூர் (திருச்சி ஜில்லா)

சக்தி ஸஞ்ஜீவி.

குழந்தையின் ஈரல்—குலைக்கட்டி வியாதியை சமனம் செய்யும் நிகரற்ற ஔஷதம். எல்லா ஊர்களிலும் கிடைக்கும்.

அல்லது நேரில்—**சக்திவிலாஸ வைத்தியசாலை,**

Karur S. I Ry.

பயன்படா வஸ்துக்களை உபயோகமாய் வளரச்செய்யும் திவ்ய ரஸாயனம்.

எங்கும் கிடைக்கும்.

தயாரிப்பவர்:—**ஆத்ரேய ஆயுர்வேதிக் ஒர்க்ஸ்.**

தென்னூர் ரோடு, திருச்சிறுப்பள்ளி.

க்ரோஷ்டகரோகம்

(திருச்சி, ஸ்ரீ T. S. சுவர அய்யர், L. I. M.)

ஸந்திகளில் பிரவேசித்த துஷ்டவாதமானது கீழ்க்கண்ட லக்ஷணங்களை உடையதாக இருக்கின்றது என்று அஷ்டாங்க ஹ்ருதயத்தில் சொல்லப்பட்டிருக்கிறது

"வாத பூர்ண க்ருதிஸ்பர்சம் சோபம் ஸந்திகதோ அகில:!
ப்ரஸாரணா ssகுஞ்சனயோ: ப்ரவ்ருத்திம்ச லவேதனம் ||"

ஸந்தியில் ப்ரவேசித்த வாதம், வாதத்தினால் நிரம்பிய கடின ஸ்பர்சத்தை உடைய சோபத்தை உண்டுபண்ணுகிறது. தவிர, அவ்வங்கத்தை நீட்டுவதிலும், மடக்குவதிலும் வேதனையை உண்டு பண்ணுவதாயும், இன்னும் சில இடத்தில் நீட்டுவதும் மடக்குவதுமே முடியாமலும், அவ்விதம் பலவந்தமாக நீட்டிமடக்க முயன்றால், வேதனையை உண்டுபண்ணுவதாகவும் இருக்கின்றது.

விருத்தாந்தம்:— அடுத்தபடியாக இவ்வியாதியின் லக்ஷணங்களை உடையதான மற்றைய வாத விகாரங்களிலிருந்து இதைப் பிரித்து அறியவேண்டிய அவசியம் ஏற்படுகின்றது.

முக்கியமாக, ஆமவாதம், வாதசோணிதம், ஸந்திகதவரணை சோபம் என்ற இம்மூன்று விகாரங்களையும் இவ்விடம் குறிப்பிடவேண்டியிருக்கின்றது. இம்மூன்றினுடைய லக்ஷணங்களை சன்று அறிந்தால்தான், க்ரோஷ்டுக சீர்ஷத்தை இவைகளிலிருந்து பிரித்து அறிய சுலபமாயிருக்கும்.

முதலாவதாக ஆமவாதம் என்ற வியாதியை எடுத்துக்கொள்வோமேயாகில், அவ்விகாரத்தில் முழங்கால் மாத்திரமல்லாமல் இன்னும் மற்றைய ஸந்திகளில் ஒன்றோ, பலவோ பாதிக்கப்படுகின்றன. பொதுவாக பெரிய எலும்புப் பூட்டுகளில் வீக்கமும், வலியும் ஏற்படுகின்றன. தவிர, ஒவ்வொரு ஸந்தியிலிருந்து மற்றொரு ஸந்திக்கு வலி மாறிக்கொண்டே போகின்றது. இவ்வியாதிக்கு சிகித்ஸையோவெனில், உஷ்ண வீர்யமுள்ளதாயும், ஆம தோஷத்தைப் பசனம் செய்வதாயுமுள்ள ஔஷதங்களைக்கொண்டதாக இருக்கவேண்டும்.

இரண்டாவதாக வாதசோணித விகாரத்தை எடுத்துக்கொண்டால், கால்களில் உள்ள எலும்புப் பூட்டுகள் பெரும்பாலும் பாதிக்கப்படுகின்றன. அதன் பிறகு கைகளிலுள்ள ஸந்திகள் பீடிக்கப்படுகின்றன. அநேகமாக சிறிய ஸந்திகளே தூஷிப்பிக்கப்படுகின்றன. இங்கு ஜ்வரம் காணும். இவ்வியாதியில் சீதவீர்யமுள்ளதும், ஸ்நிக்தமாயுள்ள ஔஷதங்கள் பிரயோகிக்கப்படவேண்டும்.

மூன்றாவதாக, ஸந்திகதவ்ரண சோபத்தைப் பார்க்குங்கால், இது வெகு சீக்கிரத்தில் பரவக்கூடிய தன்மையை உடையதாக இருக்கின்றது. துரிதமாகவே பாகத்தையும் அடைந்துவிடும். அநேகமாக இதையறிவதில் அதிகமாக சிரமம் ஏற்படுவதில்லை எனக் கூறலாம்.

சிகித்ஸாபத்ததி:—மேற்கூறிய நிதான, லக்ஷணஸம்ப்ராப்திகளிலிருந்து, க்ரோஷ்டு சீர்ஷம் என்னும் வாதவிகாரத்தில் எல்லா தோஷங்களும் தூஷிக்கப்பட்டிருக்கின்றன என சம்சயமின்னியில் தெரியவருகிறது. ஆகையால், சிகித்ஸை செய்கையில் ஒன்றுக்கொன்று விருத்தமில்லாதவைகளான ஔஷதங்களைப் பிரயோகிப்பது மிகவும் ஆத்யாவசியமான காரியமாகும்.

சிகித்ஸையைக் குறிப்பிடுகையில், பாவப்ரகாசத்தில் கீழ்க்கண்ட ச்லோகம் காணப்படுகிறது.

"வாத ரக்தக்ரியாபிச்ச ஜயேஜ்ஜம்பூக மஸ்தகம்."

அதாவது, க்ரோஷ்டுக சீர்ஷத்துக்குச் செய்யவேண்டிய சிகித்ஸாமுறை வாதசோணித வ்யாதிக்கு செய்யவேண்டிய சிகித்ஸையைப் போல்தான் என அபிப்பிராயப்படுகிறார்.

மேற்கூறிய காரணம் கொண்டு, வாதசோணித சிகித்ஸை முறையை முதலில் ஆராய்வது நலமாயிருக்கும்.

ப்ராணக்ஷீணமோ, மாம்ஸக்ஷீணமோ இல்லாமலும், தாஹம், ஜ்வரம், மூர்ச்சை, ச்வாஸம், காஸம், அரோசகம் முதலியவைகளால் பீடிக்கப்படாமலிருப்பவர்களும், பலவானாக இருப்பவர்களும் வைத்தியம் செய்துகொள்ளத் தகுதியுள்ளவர்களாவார்கள்.

அப்போர்ப்பட்டவிடத்தில், முதலில் பஹுவாதம், ருசூஷம், கூணமான அங்கம், இவைகளில்லாமலிருப்பவர்களுக்கு, மார்க்கத்தை ஆவரணம் செய்துகொண்டிருக்கும் துஷ்ட சோணிதத்தை அநேக தடவைகளில் கொஞ்சம் கொஞ்சமாக ஸ்ரவிக்கவேண்டும். அதிகம் எடுத்துவிட்டால் வாததோஷம் அதிகரித்துவிடும். அன்யோன்ய விருத்தத்தை உண்டுபண்ணஹேதுவாகும்.

தோஷத்தினுடைய அளவுக்குத் தக்கபடியும் ஆதுரனின் பலத்திற்கேற்றவாறும் ரக்தஸ்ராவம் செய்யவேண்டும். ரக்தமோக்ஷணம் செய்வதற்கு அநேக முறைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. அவைகளின் முதன்மையானதும், மிகவும் உபயோகமாயிருக்கக் கூடியதுமான ஜலூக விதியைச் செய்வது மிகவும் நலம். அதைப் பற்றிக் குறிப்பிடுகையில் வாக்படர்,

"ருக்தாஹ்ருக சூல தோகார்த்தாதஸ்ருக் ஸ்ராவ்யம் ஜலூகஸா!" என்று கூறுகிறார்.

அதாவது வலி, தாஹம், சிவப்பு, முதலியவைகளுடன் கூடின சோபத்தில் ஜலூகத்தினால் (அட்டையினால்) ரக்தமோக்ஷணம் செய்விக்கவேண்டும். அளவுக்கு மிஞ்சி அதிகமாகவும் ஸ்ரவிக்கக் கூடாது. அவ்விதம் செய்தால், கம்பீரம் என்னும் உபத்திரவம், தமிர விக்கம், பிடிப்பு, நடுக்கல், காடவ்ரண விகாரங்கள் ஸங்கோசம் முதலானவைகள் உண்டாகும் ரக்தம் குறைந்துபோவதனால்.

பொதுவாக சிகித்ஸையின் ஆரம்பத்தில் ஸ்நேகபானம் செய்துவிட்டு, ஸ்நேகத்துடன் கூடிய விரேசனத்தைக் கொடுக்க வேண்டும். அவ்வித விரேசன மருந்து மிருதுவாகயிருக்க வேண்டும். அதன்பின் அநுவாஸன, நிரூஹவஸ்திகளைக் கொடுக்க வேண்டும். ஸ்நேக யுக்தமான ஸேகங்கள், அப்யங்கம், லேபங்கள் முதலானவைகளை உபயோகிக்க வேண்டும. எப்பொழுதும் ருக்ஷமில்லாதவைகளையே கையாள வேண்டியது அத்யாவசியமாகும்.

சிகித்ஸைக்கு வேண்டிய ஔஷதங்கள்

இதுவரை சிகித்ஸை செய்யவேண்டிய முறைகளைப்பற்றிச் சுருக்கமாகச்சொன்னோம். எந்தெந்தவிதமான சிகித்ஸைக்கு எந்

தெரிந்த ஔஷதங்களை உபயோகிக்கலாம் என இனி ஆராய்வோம். ஸ்நேகபானம் செய்விப்பதற்கு திவ்வக க்ருதம் உபயோகிக்கலாம். அடுத்தபடியாக மஹாதிக்தக க்ருதம், குக்குலுதிக்தக க்ருதம் முதலானவைகளையும் உபயோகிக்கலாம். மேற்கூறிய ஔஷதங்கள் அஷ்டாங்க ஹிருதயத்தில் கூறப்பட்டிருக்கின்றன. விரேசனம் கொடுப்பதற்கு ஆதரவுக்குப் போதுமான தேஹபலம் இருத்தல் வேண்டும். ஸ்நேக விரேசனத்துக்கு கீழ்க்கண்ட ஔஷதங்கள் உபயோகிக்கலாம்.

1. **தாத்ரியாதிலம்:**— இதில் ப்ராம்மிஸ்வரஸம், லசுனஸ்வரஸம், ஏரண்ட தைலம், கடுகரோஹணீ கல்கம், இவைகள் இருக்கின்றன. (அனுபூதம்).

2. **சுகுமாரக தைலம்:**— இதில் அதிமதுரம், திராக்ஷை, பேரீச்சம்பழம், குமிழ், கொல்லிமுள்ளி, நிலப்பனங்கிழங்கு, சுக்கு, திப்பிலி, ஜீவநீயகணம், இவைகள் இருக்கின்றன. (சரகஸம்ஹிதை).

சோதனமான பிறகு குக்குலு சேர்ந்த மருந்துகள் கொடுப்பது சுலபமாயிருக்கும். கீழ்க்கண்ட யோகங்கள் உபயோகமாயிருக்கும்.

1. **த்ரிபலாகுக்குலு:**— இதில் கடுக்காய், தான்றிக்காய், கொல்லிக்காய், அதிவிடயம், தேவதாரு, மரமஞ்சள், கோரைக்கிழங்கு, கருங்காலி, வேங்கை, சித்திரமூலம், சாரிவேர், சிலாஜது இவைகளுடன் குக்குலுவும் இருக்கிறது. முக்கியமாக அனுபானமாகக் கொடுக்கலாம். (பாவப்ரகாசம்).

2. **புனர்னவா குக்குலு:**—இதில் சாட்டரணிவேர், சுக்கு, குக்குலு, ஏரண்ட தைலம், த்ருவருத் சூர்ணம், சித்திரமூலம், சுக்கு, மிளகு, திப்பிலி, பல்லாதகம், வாயுவிடங்கம், இந்துப்பு இவைகள் இருக்கின்றன. (பாவப்ரகாசம்).

3. **அம்ருதாகுக்குலு:**— இதில் சித்திரமூலம் குக்குலு, த்ரிபலை, த்ரிகடு, வாயுவிடங்கம், நீர்வாளம் இவைகள் இருக்கின்றன. (பாவப்ரகாசம்.)

மேற்கூறியவாறு இன்னும் அநேக மருந்துகள் இருக்கின்றன. உதாஹரணத்திற்கு மாத்திரம் தான் இங்கு சில யோகங்கள் எழுதப்பட்டுள்ளன.

அடுத்தபடியாக கூரகஷாயங்கள் உள்ளுக்குக் கொடுத்தால் உபயோகமாயிருக்கும்.

1. **குடூச்யாதி கஷாயம்:**— இதில் சிந்தில் கொடி, த்ரிபலை கூரம், குக்குலு முதலியவைகள் இருக்கின்றன. (பாவ ப்ரகாசம்.)

2. **படோலாதி கஷாயம்:**— இதில் பேய்ப்புடல், கடுகரோஹிணீ, த்ரிபலை, சிந்தில் கொடி இவைகள் இருக்கின்றன. (பைஷஜ்யரத்னாவளி).

3. **சாரிபாதி கஷாயம்:**—இதில் சன்னரி, சதாவரீ, தேவதாரு, சிந்தில் கொடி இவைகள் இருக்கின்றன.

அடுத்தபடி மேலுக்குத் தடவ லேபங்கள் உபயோகிக்கலாம். உதாரணமாக நீழ்க்கண்ட யோகங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

1. **தத்தூராதிலேபம்:**— இதில் ஊமத்தங்காய், எள்ளு, சிந்தில்கொடி, அருகமபில், கவரீதம், கூரம் இவைகள் இருக்கின்றன.

2. **ப்ரபெளண்டரீகலேபம்:**— இதில் முக்யமாக தாமரைக்கிழங்கு, மஞ்ஜிஷ்டை, மரமஞ்சள், அநிமதுரம், சந்தனம் இவைகளிருக்கின்றன. (சாகர்.)

3. சால்மலீகல்கமும், ஆட்டின்பாலும் கலந்து உபயோகிக்கவும்.

4. ரக்தமோக்ஷணத்துக்குப் பிறகு திலம், அநிமதுரம், ஞாழல் இவைகளை க்ருதத்துடனும், பாலுடனும் அரைத்து மேலே தடவவும்.

விக்கம் குறைவதற்கு ஸைகம் செய்ய வேண்டியிருந்தால் நீழ்க்கண்ட தைலங்கள் உபயோகப்படுத்தலாம்.

1. **பிண்ட தைலம்** — இதில் மெழுகு, மஞ்சிஷ்டை, குங்குலியம், நன்னரி, அதிமதுரம், ஏரண்ட தைலம் இவைகளிருக்கின்றன. (சார்ங்கதர்.)

2. **மஹாபிண்ட தைலம்**:— இதில் நன்னரி, சிந்தில் கொடி, காகோளீ, க்ஷீரகாகோளீ, சதகுப்பை, இந்துப்பு, சந்தனம், ஜீவகம், மேதா, மஹாமேதா, ஏரண்ட தைலம் முதலியவைகள் இருக்கின்றன. (பாவப்ரகாசம்.)

3. **குடீச்யாதி தைலம்**:—இதில் சிந்தில் கொடி கஷாயம் சிந்தில் கொடி கல்கம், கொம்பரக்கு கஷாயம், இவைகள் இருக்கின்றன. (யோகரத்னகரம்.)

4. **மதுயஷ்டி தைலம்**:—இதில் அதிமதுரம், கீழாநெல்லி, சந்தனம், அகில், எருக்கம்பூ, சிந்தில் கொடி, மூவிலை, சதாவரி, தும்மட்டிக்காய் இவைகள் இருக்கின்றன. (அஷ்டாங்கஹ்ருதயம்.)

இவைகளுடன், சில கஷாயங்களும் கலம் தருபவைகளாயிருக்கின்றன. உதாரணமாக இரண்டொரு யோகங்கள் அடியிற் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

1. **ப்ருஹன் மஞ்ஜிஷ்டாதி க்வாதம்**:— இதில் மஞ்ஜிஷ்டை, கோரைக்கிழங்கு, குடஜப்பட்டை, சிந்தில் கொடி, சிறுதேக்கு, மஞ்சள், மரமஞ்சள், பேய்ப்புடல், கடுகரோஹிணீ, மருள், வாயுவிடங்கம், வேங்கை, கொடிவேலி, தும்மட்டிக்காய், நன்னரி இவைகள் இருக்கின்றன. (யோகரத்னகரம்).

2. **திராக்ஷாதி கஷாயம்**:— இதில் திராக்ஷைப்பழம், எருக்கம்பூ, அதிமதுரம், சந்தனம், குமிழ் முதலியவைகள் இருக்கின்றன. (ஸுச்ருதம்).

அடுத்தபடி வைத்தியம் செய்து ஸ்வஸ்தம் செய்யப்பட்ட ஒரு ஆசாமியுடைய விருத்தாந்தம் கீழே தரப்படடிருக்கிறது.

10 வயது கொண்ட ஒரு சிறுவனுக்கு திடீரென ஒருகால் இடது முழங்காலில் வீக்கம் கண்டது. வீக்கம் காணுவதற்கு முதல் நாள் காலில் ஒரு மாடு முட்டிற்று என அவன் தாயினால் சொல்லி ஆறிப்பட்டது. வீக்கம் கண்டு ஒரு வருடத்துக்குப்

பிறகுதான் அவன் சிகித்ஸைக்கு வந்தான். அதுவரை ஏதோ கைமருந்தாகச் செய்து சிகித்ஸை செய்யப்பட்டானெனத் தெரிய வருகிறது. அவனுக்கு குணம் ஒன்றும் ஏற்படாததால் சிகித்ஸைக்கு வந்தான்.

அவனுடைய தேஹத்தில் முழங்கால் வீக்கத்தைத்தவிர மற்ற ஒருவிதமான கோளாறும் காணப்படவில்லை. வெண்டுமென்றால் சிறிது மலச்சிக்கல் மாத்திரம் இருந்தது எனச் சொல்லலாம். தவிர, அவனுடைய தேஹம் சிறிது இளைத்திருப்பதாகக் காணப் பட்டது.

அவனது முழங்காலில் உள்ள வீக்கம் மத்தியில் உயர்ந்தும் ஓரங்களில் தாழ்ந்தும் இருந்தது. அவ்வீக்கத்தை ஸ்பர்சித்தால் வலி அறியப்பட்டது. முழங்காலை நீட்டவோ, மடக்கவோ முடிய வில்லை. அவ்வீக்கத்தை ஸ்பரிசித்து அசைத்துப்பார்த்தால், ஒரு வித சப்தமும் ஏற்படுவதில்லை. வீக்கமுள்ள இடம் சிவந்த நிறத் துடன் கூடியதாயும், மற்ற இடத்துக்கு மாறுன நிறத்துடனும் இருந்தது. தாஹ உணர்ச்சி (Burning sensation) வீக்கமிருக்கு மிடத்தில் இருந்தது. பொதுவாக ஆதுரனுக்கு ரக்தம் குறைந் திருந்தது.

இந்து ஏற்கனவே காம் சொன்னபடி நான்கு தோஷங்க ளுடைய விருத்தியும் ஏற்பட்டிருக்கிறது என்று கண்டு புலப்படு கின்றது. இந்த வாதகோபத்தால் ரக்தவஹ ச்ரோதஸ்ஸுக்கள் அடைபட்டு அவ்விடம் ரக்த ஓட்டம் தடைப்பட்டிருக்கிறது. அதன் நிமித்தம் வீக்கமும், விரைப்பும் (stiffness) உண்டாயிருக் கிறது

செய்யப்பட்ட சிகித்ஸை.

இந்த ரோயாளிக்கு சுமார் ஒன்றரை மாத காலம் வைத்தியம் செய்யப்பட்டு, பூர்ண ஸ்வஸ்தம் ஏற்பட்டது.

முதல்நாள் தொடங்கி பிண்ட தைலத்தால் தினம் இரண்டு வேளையும் 'தாரா' செய்யப்பட்டுவந்தது. அம்மாதிரி ஒருவாரம் செய்துவரப்பட்டது. கூடவே மூன்று வது காளன்று மிருது

சோதனமாக 'தாத்ரீ தைல'த்தை உள்ளுக்குக் கொடுத்ததில் 3 தடவை நன்கு மலப்ரவிருத்தி ஏற்பட்டது. நான்காவது நாள் முதற்கொண்டு 'சாரிபாதி கஷாயம்' தினம் இரண்டுவேளை கொடுக்கப்பட்டு வந்தது. 'தாரா' செய்துகொண்டிருந்த வரையில் தாஹ உணர்ச்சி இல்லாமலிருந்து மற்ற வேளைகளில் வந்துவிடுகின்றது. ஆகையால் ரக்த தோஷம் போவதற்கு ரக்தமோக்ஷணம் செய்ய வேண்டியது அவசியமாயிற்று. நான்காவது நாளே ரக்தமோக்ஷணமும் கூடவே செய்யப்பட்டது. நான்கு அவுன்ஸ் கெட்ட ரக்தம் முதல் தடவையில் எடுக்கப்பட்டது. கூடவே பித்த சமனம் செய்வதற்கு அவனுடைய அக்னிபலம் சரியானபடியிருந்ததால், 'மஹாதிக்தக்ருதம்' கொடுக்கப்பட்டது. ரொட்டியும், பாலும் ஆகாரமாய்க் கொடுக்கப்பட்டது.

இரண்டாவது வாரத்தில் பிண்டதைலத்தை அவ்வீக்கத்தின் மேல் தடவி கட்டுபாயிற்று. ஏற்கனவே கொடுக்கப்பட்டுவந்த கஷாயமும், இப்பொழுது குக்குலு திக்தகிருதமும் கொடுக்கப்பட்டன.

காலையில் பிண்டதைலத்திலும் பிசுவும், மாலையில் தத்தூராதி லேபமும் தடவப்பட்டது. இவ்விதம் செய்துவந்ததில் வீக்கம் இரண்டு அங்குலங்கள் குறைந்துவிட்டது. தாக உணர்ச்சியும் இல்லை. ஆகாரத்தில் ஒன்றும் மாறுதல் கிடையாது.

மூன்றாவது வாரத்தில், முதலில் மறுபடியும் சோதனையின் நிமித்தம் 'தாத்ரீ' தைலம் கொடுக்கப்பட்டது. இதனால் ஆறு தடவைகள் மலப்ரவ்ருத்தி ஏற்பட்டது. மறுபடியும் சாரிபாதி கஷாயமும், பிண்டதைலத்தை அப்பாகத்தில் நன்கு தடவியும் கட்டிவிடப்பட்டது. தத்தூராதி லேபமும் மேலே தடவப்பட்டது. ஆதுரனுக்கு நன்கு பசிவ்ருத்தியாகி எதையும் ஜீர்ணிக்கும் சக்தியைப்பெற்றான். தற்சமயம் அவனுக்கு ஒருவேளை சாப்பாடும் போடப்பட்டது.

நான்காவது வாரத்தில் சென்ற வாரம் மாதிரியே சிகித்ஸை செய்யப்பட்டது. அவனால் காலை நீட்டவும் மடக்கவும் முடிந்தது. கொண்டாமல் காலை வைத்து நடக்க முடிந்தது. இவ்வாரத்தில் இரண்டு வேளையும் ஆகாரம் கொடுக்கப்பட்டு வந்தன. கூடவே

அவன் மாம்ச ஆகாரமும் சாப்பிட அனுமதிக்கப்பட்டான். மறு தடவை ரக்தமோக்ஷனம் செய்யவேண்டிய அவச்யம் ஏற்படாமற் போய்விட்டது.

ஐந்தாவது வாரத்தில் அவன் தாராள்மாக நடப்பது ஸாத்ய மாயிற்று. மறுபடியும் விரேசன ஔஷதம் அவனுக்குக் கொடுக் கப்பட்டது. நன்கு விரேசனம் ஆயிற்று. ஔஷதப்ரயோகங்கள் முன்னுல் செய்தமாதிரியே தான். மாறுதல் ஒன்றும் இல்லை.

ஆறுவது வாரத்தில் அவன் எல்லோரையும் போலவே நன்கு நடக்க ஆரம்பித்துவிட்டான். வீக்கமே ஒன்றுமில்லை. அவனு டைய இரண்டு முழங்கால்களுக்கும் ஒன்றுக்கொன்று வித்யாச மில்லாமலே காணப்பட்டது. நடக்கும்போது வேகமாயும் தங்கு தடையில்லாமலும் நடந்தான். சிறிதுகாலம் வரை குக்குலு திக்த க்ருதம் மட்டும் சாப்பிடும்படி அவனுக்குச் சொல்லப்பட்டது. ஆஸ்பத்திரியிலிருந்து வீட்டுக்குச்செல்ல அனுமதிக்கப்பட்டான்.

லோஹங்கள்.

(சிரோமணி, S. V. பாதாகிருஷ்ண சாஸ்திரிகள், தஞ்சாவூர்.)

லக்ஷணம்:— இது இரண்டுவிதம். சுரகம் மிச்ரகம் என. சுரகம் என்பது லோஹக்கலப்பற்றதும் தனங்களாக விரிபக்கூடிய தாகவும், வெள்ளிபோன்றதாயும் சீக்ரம் உருகியும், உருகும் பொழுது சத்தமில்லாமலும் அதற்குரிய கனத்துடனும் இருக்கும். மிச்ரகம் மற்ற தாது கலப்புற்றும் உருக்கினுல் கெட்டியாயும், கரு வெண்மையாயும், ருக்ஷமாயும், கடினமாயுமிருக்கிறது ஆகையால் இவைகளில் சுரகம் என்ற சுத்தலங்கமே சிலாக்யம்.

இது அசுத்தமாகவே சரீரத்தில் சேர்ந்தால், சரீரத்தின் ஒளி குன்றி குஷ்டம், வெண்குஷ்டம், குல்மம், பிரமேஹம், பாண்டு, சோதம், சிலேஷ்மஜ்வரம், பகந்தரம், சுக்ரார்மீ, ரக்தவிகார்ங்கள் இவைகளை உண்டாக்குகின்றது. முக்கியமாய் ரஸரக்தம், பித்தம், மூத்ரம் இவைகளில் அதிக விகாரங்களை உண்டாக்குகின்றது.

இதன் ரஸம்—லவணமும்—கஷாயமும், அனுரஸம், திக்தம், வீர்யம், லகுஸரம், சிசிரம், ரூக்ஷம்.

சுத்தி:—இது மற்ற லோஹங்களைப்போலல்லாமல் சிக்கிரம் உருகுவதால் தகடாக அடித்து தணலில் காட்டி சுருக்கு கொடுப்ப தென்பது அனுபவம். ஆனால் அதை அப்படியே உருக்கி சோதன திரவத்தில் விடவேண்டும். தைலம் தவிர மற்ற திரவங் களில் வங்கத்தை உருக்கி சாய்க்கும்பொழுது வங்கம் தெரித்து அபாயம் உண்டாக்குமாதலால்—சுத்தி செய்யும்பொழுதெல்லாம் பூமியின் கீழ் பள்ளம்வெட்டி பூமி மட்டத்திற்கு ஒரு சிறுவாணை யைப் பொறுத்தி அதில் சோதன திரவத்தைவிட்டு மேல் ஓர் கல் யெந்திர மூடியை—நடுவில் துவாரமுள்ளதைப் போட்டு மூடி அதன் துவாரத்தில் உருக்கின வங்கத்தை விடவேண்டும். (இம் முறையைக் காரீயம்—துத்தநாகம் இவைகளிலும் அனுஸரிக்க வேண்டும்.)

(1) கொக்கிச் சாற்றில் மஞ்சள் தூள் போட்டு அதில் 3 தடவை சுயத்தை உருக்கிவிடவும். (2) சுண்ணாம்பு நீரில் 7 தடவை உருக்கிவிடவும். (3) எருக்கம்பாலில் 3 அல்லது 7 தடவை உருக்கிவிடவும். (4) ஆட்டுப்பால் புளித்த மோர்—கற்றாழைச்சாறு, முக்கரட்டைச்சாறு, எட்டிச்சாறு, குமிழஞ்சாறு, நீலவாணைச்சாறு, இவைகளில் ஏதாவதொன்றில் 7 தடவை உருக் கிச் சாய்க்கலாம்.

பஸ்மமுறை:— இதை பஸ்மம் செய்வதில் தாளகத்திற்கு தனி சக்தி இருக்கிறது. ஆனால் சிலர் தனி கஷாயங்களாலும், கந்தகத்தாலும் பஸ்மம் செய்கிறார்கள். கஷாயங்களால் செய்யப் பட்ட பஸ்மம் சீதவீர்யம், தாளககந்தகங்களால் செய்யப்பட்டது உஷ்ண வீர்யம்.

(1) சுயத் தகட்டில் எருக்கம்பாலிலரைத்த தாளகம் தடவி மேலும் கீழும் அரசம்பட்டை, புளியம்பட்டை இவைகளின் கஷாரம் போட்டு 2—3 லகுபுடம் போட பஸ்மமாகும்.

(2) சட்டியில் சுயத்தை உருக்கி அதில் சிறிது சிறிதாக $\frac{1}{4}$ பங்கு ரஸத்தை சேர்த்து பிறகு தாளகமும் சேர்த்து காரிலவங்

கழியினுல் கிளறிவிட்டுக்கொண்டிருக்க வேண்டும். பஸ்மமாகும் வரை செய்யவேண்டும்.

(3) தாளகத்தை புரசம் சாற்றுலனரத்துக் தகட்டில் தடவி 3 கஜபுடம் போட பஸ்மமாகும்.

(4) ஓட்டில் ரஸத்தை உருக்கி, ரஸத்திற்கு கால் புளிய ஓடு சுஜாரம் சேர்த்து இரும்புக்கரண்டியில் கிளறிக்கொண்டுவர பஸ்ம மாகும். அதற்கு ஸமம் தாளகம் சேர்த்து அம்லரஸத்தால் ஒரு யாமமரைத்து பத்து கஜபுடம் போடவேண்டும்.

(5) ரஸத்தை மண் ஓட்டில் உருக்கி அதை எருக்கு, அரசு, ஆல், புரசு, இவைகளின் வேர் கழியாலாவது, இரும்பு தண்டத் தாலாவது கிளறிக்கொண்டேவர, அதிகப்படியான உஷ்ணத்தால் சிவந்து உருண்டையாகும். பிறகு அதை $\frac{1}{8}$ பங்கு தாளகத்துடன் சேர்த்தரைத்து கற்றுழைச்சாற்றுடன் அரைத்து 7 தடவை சராவ ஸம்புடத்தில் வைத்துப் புடம்போட பஸ்மமாகும். இம்மாதிரியே உருகின ரஸத்தைக் கிளறும்பொழுது கெட்டியாகும் வரையில் கர்பூர சிலாஜது, சுண்ணாம்பு, மஞ்சள், ஜீரகம் இவைகளின் சூர் ணம் ரஸமுருவி சுஜாரம் இவைகளில் ஒன்றைப்போட்டு கிளறிவர கெட்டியானவுடன் மேல் சராவம்போட்டு மூடி அக்னி வர்ண மாகும்வரை காய்ச்சவேண்டும். பஸ்மமாகும்.

(6) ரஸத்திற்கு 20 பங்கு ஆவி பிண்ணுக்கை சனல் மேல் வைத்து அதன்மேல் ரஸத்தகட்டை வைத்து மூட்டைகட்டி நூல் சுற்றி அதை கஜபுடம் போடவும். இம்மாதிரி ஆவி பிண்ணுக் கிற்கு பதிலாக ஜீரகத்தையும் போடலாம். பஸ்மமாகும் வரை கஜ புடம் போடவும்.

ரஸினர்கள்—சுஜாரத்தால் செய்யப்படும் பஸ்ம விதிகளில் பஸ்மத்திலிருக்கும் சுஜாராம்சத்தை நீக்க ஜலம் விட்டுக்கரைத்து தெளியவைத்து ஜலத்தை இறுத்து விடவும். ஜலத்தில் சுஜாரம் கரைத்துவிடும் என அபிப்பிராயப்படுகிறார்கள். பிராசீன கிரந்தங் களில் மேற்கூறிய விதானம் காணும். ஆனல் சுஜாரத்தால் பஸ் மம் செய்யப்பட்டபிறகு தாளகம் அம்லரஸம் சேர்த்தரைத்து புடம்

போடுவதால் கூதாரத்தின் கடுமையை அம்லரஸம் குறைத்து விடு கிறது எனக்கொள்ளலாம்.

தூளரும்—அனுபானமும்

வாந்தி, விரணம், பிரமேஹரம், கூஷ்யம், பெரும்பாடு, கிருமி, ஸ்வப்நமேஹரம், காஸம், சுவாஸம், கார்ச்யம், பாண்டு, கர்பாசயம் கழுவுதல், மூச்சுத்திணறல், ராஜயக்ஷ்மாவி லுண்டாகும் இரவில் அதிகம் வியர்த்தல் இவைகள் நீக்குவ துடன் பலம், தைர்யம், அழகு, கல்ல பார்வை, வீர்யம் முதலிய வைகளை கொடுக்கிறது. பிரமேகத்தில் குடிலைத்வத்துடனும், சிலாஜது தேனுடனும், பாண்டுவில் நெய்யுடனும், குல்மத்தில் வெங்காரத்துடனும், அக்னிமாந்தியத்தில் திப்பிலி சூர்ணத்து டனும், அஜீர்ணத்தில் பாக்குடனும், ரக்தபித்தத்தில் மஞ்சள் சூர் ணத்துடனும், விரணமேஹத்தில் ரஸஸிந்தூரம், இஞ்சிச் சாறு, மஞ்சள் சாறு இவைகளுடனும் விரணத்தில் வருணாதிகண கஷா யத்துடனும், முகரோகத்தில் சம்பகச் சாற்றுடன் கர்பூரம் சேர்த் தும், வீர்யஸ்தம்பனத்திற்கு கஸ்தூரியுடனும், சுக்ரபுஷ்டிக்கு ஜாதிக்காய் தேனுடனும், த்வக்ரோகங்களில் கருங்காலி கஷாயத் துடனும், சுக்ரதுஷ்டியில் கடல் நுரையுடனும், நபும்ஸகத்தில் காயு ருவி சூர்ணத்துடனும், வீர்யவிருத்திக்கு கருவேலம் பிசினுடன் மஞ்சள், தேன் சேர்த்தும் சரீரம் முழுவதும் எரிச்சலுக்கு, சர்க் கரை, எலுமிச்சம்பழச் சாற்றுடனும், மேஹத்தில் துளஸி இலை யுடனும், லோஹரம், சுக்தி, ஸர்ஜரஸத்துடன் வெண்பிரதரத்திலும், கொடுக்கலாம்.

லவங்கம்—கர்யாம்—நாகம்

இதற்கு நாகம் என்ற வடமொழியில் பெயர் கூறப்படுகிறது. தென்மொழியிலுள்ள 'நாக' என்ற சப்தம் யசஸும் என்கிற சக்தி நாகத்தை குறிக்கின்றது.

சீக்ரம் உருக்கூடியது. மிகவும் பருவாக இருக்கும். வெட்டுவாய் கருத்திருக்கும். நெருப்பில் போட்டால் துர்கந்தம் வரும். மேல்புறம் கருத்து கட்டிடும். கெட்ட காற்றமிருப்பதால் பூதிலோஹரம் எனப்பெயர் வந்திருக்கிறது. இதே காரணத்தில் வங் கம், யசதம் இவ்விரண்டிற்கும் பூதிலோஹரம் எனப்பெயர்.

சயச்செந்தூரம் என்ற ஸிந்தூரம் இதிலிருந்து உண்டாவ தால் "ஸிந்தூரஹேது" எனவும் கூறப்படுகிறது.

இதன் ரஸம்—மதுரம் நிக்தம், வீர்யம்—ஸிதம், உஷ்ணம், குரு, ஸரம், தீபனம், லேகனம். விபாகம்—மதுரம்.

அசுத்தமாகவே உபயோகிக்க த்வக்ரோகங்களையும் ஸந்தி வாதம், பக்ஷவாதம் முதலிய வாதரோகங்களையும் உண்டாக்கு கின்றது.

சுத்தி:— சுத்தி பஸ்மக்ரமங்கள் வங்கத்திற்குப் போலவே விசேஷமாக (1) கொச்சிவேர் சூர்ணத்தை அரைத்து காரீயத் தகட்டில் தடவி காயவைத்து உருக்கி எருக்கம்பாலில் சுருக்கு கொடுக்கவும். (2) மஞ்சள், கொத்தமல்லி விதை, நீர்முள்ளி, கழற்சிகோடி, நாயுருவி, புரசு முதலியவைகளின் க்ஷாரத்தைக் களிப்பாலில் கலக்கி அதன் நடுவில் 7 தடவை காரீயத்தை உருக்கிவிடவும். (3) கருவேலம் சாற்றில் காகத்தை 7 தடவை உருக்கிவிடவும்.

பஸ்மவிதி:—இதுவும் அனேகமாக வங்கத்திற்குப்போலவே ஆதல் தனி க்ஷாரத்தால் மட்டும் செய்யப்பட்ட வங்கபஸ்மத்தை உபயோகிப்பதைப்போல் இதை உபயோகப்படுத்தக்கூடாது. க்ஷாரத்தால் செய்யப்பட்ட பஸ்மத்தை மறுபடியும் மனுசிலையோ —தாளகமோ சேர்த்த பிறகுதான் உபயோகப்படுத்த வேண்டும். இப்விதம் பஸ்மமான பிறகு இதை ஸிந்தூரமாக்க ஆடாதுடைச் சாற்றிலும் ஓம கஷாயத்திலும், கொட்டக்கரந்தைச் சாற்றிலும் அரைத்து பத்து கஜபுடம்போடவும்.

அர்சஸ் முதலியவைகளில் வெளியுபயோகத்திற்கு மட்டும், உருகின காரீயத்தில் சிறிது சிறிது கந்தகம் சேர்த்து பஸ்மமான வுடன் தாளக ஆதின பிறகு இதற்கு உபயோகப்படுத்தலாம். சுத்த ஸ்நம்பனமாக உபயோகப்படும்.

சமன்:—இது ரஸத்தின் பர்யாயபதமாகவும் துத்தத்தில் ஒரு பேதம் எனவும், காகபஸ்மவிதானங்களில் ஓர் விதம் எனவும் மூன்று விதமாகக் கூறப்படுகிறது. 30 பலம் காகத்தை எருக்கம்

பாலிலரைத்து நாகம் ¼ பலம் ஆகும் வரை புடம்போட்டு எடுக்க வேண்டும். பிறகு அது ஆயிரம் புடம் போட்டாலும் குறையாது. இம்மாதிரி வங்கத்திலிருந்தும் எடுக்கலாம்.

குணம்—அனுபானம்

பிரமேஹம், வாதரோகங்கள், கிரஹணீ, அர்சஸ், கபதோஷம், விரணம், ரக்தபிரதரம் இவைகளைப் போக்கக்கூடியது.

பிரமேஹத்தில், மஞ்சள், நெல்லி இவைகளின் சாற்றுடனும், தேனுடனும், அசோக கஷாயத்துடன் ரக்த பிரதரத்திலும், ரக்தார்சுகளில் சிறுநாகப்பூ சூர்ணத்துடனும், கபவாத மேஹங்களில் குடசி ஸத்வ சூர்ணம் தேனுடனும், அந்திரசோதத்தில் ஸ்வர்ண பஸ்மம், ரஸஸிந்தூரம், தாமரபஸ்மம் இவைகளாலும், விருத்த சோதத்தில் எற்படும் ஆமேஹபகத்தில் காஞ்சூரி, சிற்றாமுட்டி வேர், ஜடாமாம்ஸீ கஷாயம் இவைகளுடனும், பகுவதத்தில் ரஸஸிந்தூரம், தாம்ரம் இவைகளுடனும் கொடுக்கலாம்.

யாதம்—நாத்துநாகம்

பாவமிச்ரர் காலத்திற்கு பிறகுதான் இது தனி லோஹமாகக் கருதப்பட்டு இதன் சுத்தி பஸ்மமுறைகள் கூறப்பட்டுள்ளன. அதற்கு முன்பு, வங்கம் போன்ற ஓர் கனிஜஸத்வம் என்று பித்தளையின் கூட்டில் சேர்க்கப்படுகிறது.

கர்பரம், ரஸகம் என்ற நாத்தங்கள் கூறாமிடத்து ஓர் நிரவ்யம் கூறப்படுகின்றது. நாத்தத்தை இலர் அதன் வர்ண மாறுபாட்டை வைத்துக்கொண்டு 3 விதமாக நீலநாத்தம், பச்சைநாத்தம், வெள்ளை நாத்தம் என பிரிக்கின்றார்கள். இவை மூன்றையே அன்னபேதி, மயில் துத்தம், கர்பரமாகும். கர்பரத்திலிருந்து வங்கம் போன்ற ஸத்வம் எடுக்கப்படுவதாக ரஸரத்ன ஸமுச்சயம் கூறுகிறது. "மஞ்சள், திரிபலை, ஸர்ஜரஸம், இந்துப்பு, ஓட்டடை, வெங்காரம், சேங்கொட்டை, இவைகளை கர்பரத்திற்கு ¼ பங்கு எடுத்து அம்மத்தால் அரைத்து 'விருத்தாக' மூசையில் வைத்து மூடி நெருப்

பில் வைத்து ஊத உள்ளிருக்கும் கர்பரம் உருகிமேல் நீலஜ்வாலை கிளம்பும். அது அடங்கி வெள்ளை ஜ்வாலை கிளம்பியவுடனே இறக்கி மூடையை தலைகீழாக வைத்து தட்ட வங்கம் போன்ற ஸத்வம் விழும்."

தாது மஞ்சரியில் கர்பர என்ற பதத்தை துத்தநாகத்திற்கு பர்யாய பதமாகவும் கர்பரத்தை ரஸத்துடன் சேர்க்க 'ரஸகர்ப்பம்', தாம்ரத்துடன் சேர்க்க 'பித்தளை'யும் கூறப்படுகிறதைக்காண முன் கூறிய கர்பர ஸத்வம் தான் யசதம் எனக் கூறலாம்.

இது கஷாய ரஸமாகவும் சீத வீர்யமாகவுமிருக்கிறது.

சுத்தி:— (1) இலுப்பெண்ணெயில் 21 தடவை உருக்கி விடவும். (2) மொச்சி வேர் கஷாயத்தில் 7 தடவை உருக்கி விடவும். (3) பாலில் 21 தடவை. (4) கள்ளிப்பாலில் 7 தடவை.

பஸ்மவிதி:— இதன் பஸ்மவிதி பிராசீன கிரந்தங்களில் காணோம். (1) ஸம்பிரதாயத்தில் இரும்பு சராவத்தில் சுத்த யசதத்தை மறுபடியும் உருக்கி அதில் சுத்த ஆவிளையை இலந்தை கொட்டையளவு உருண்டை உருண்டையாக எடுத்த போட்டுவர வெளுத்து பஸ்மமாகி விடுகிறது. இதில் காடாக்கியில் துருத்தி வைத்து ஊதவேண்டும். இந்த யோகம் அதிகமாக ரக்த ஸ்ராவம் மூதலியதில் ஸ்தம்பனத்திற்கு உபயோகப்படுத்தலாம். (அ) பின் போட்டவுடன் மத்தாப்பூ மாதிரி வெளிச்சம் தோன்றும். அது நிற்கும்வரை அபின் போட்டுக்கொண்டும் இரும்பு கரண்டியால் கிளறிக்கொண்டும் வரவேண்டும். வெளிச்சம் நின்றவுடன் கன்கு சிவக்கும்வரை எரித்து ஸ்வாங்கசீதமானவுடன் எடுத்துக் கொள்ளவும்.

(2) யசதத்தை உருக்கி, ஸமனை சுத்த பாதரஸத்துடன் கூடிய கல்வத்தில் சாய்த்து உடனேயே கன்று அரைபட்டவுடன் எலுமிச்சம்பழச்சாற்றலம்பி அத்துடன் யசதத்திற்கு ஸமனை கற்கம் சேர்த்து அரைத்து சூர்ணம் செய்து சராவஸம்புடத்தில் வைத்து புடம் போட பஸ்மமாகும்.

(3) இரும்பு சராவத்தில் உருகின யசதத்தில் காயுருவி சூர்ணத்தை கொஞ்சம் கொஞ்சமாக போட்டு இரும்பு கரண்டியால் கிளறிவர பஸ்மமாகும். ஆனவுடன் அதை இரும்பு சராவத்தில் மூடி சிவக்கும்வரை எரித்து தாகை ஆறினவுடன் எடுத்துக் கொள்ளவும்.

குணமும்—அளவும்:—கண் ரோகங்கள், கபபித்த ரோகங்கள், பாண்டு, மேஹம், காஸம், சுவாஸம், நிசாஸ்வேதம், விரணம் ராவம் இவைகளை நீக்கக்கூடியது.

அக்னிமாந்தியத்தில் முன்னேவர் சூர்ணத்துடனும், பார்வை மக்தத்தில் புராண சிருதத்துடனும், வெகுநாட்களாக இருக்கும் பினஸத்தில் நெய்யுடனும் (நஸ்யத்திலும்) நிசாஸ்வேதத்தில் பிரவாள பஸ்மத்துடனும், விசர்சிகையில் பசும் நெய்யுடனும் (லேபத்தில்) காஸசுவாஸங்களில் தேன், அப்ரகபஸ்மத்துடனும் சுவாஸத்தில் இஞ்சிசாற்றுடனும், கம்பத்துடன் கூடிய பித்தவதத்தில் பூனைக்காலி, சிற்றரத்தை, ஆமணக்கு வேர் இவைகளுடனும், பிரதமகச்வாஸத்தில் தேன் திப்பிலியுடனும், ஸ்வப்ன மேஹத்தில் ஸ்வர்ண வங்கத்துடனும், 3—4 மாதங்கள் தவறாமல் பிறகு அதிகமாக ஏற்படும் ரஜோரோகத்தில் அசோகபட்டை கஷாயத்துடனும், ஆர்தவரோகத்தில் ஏற்படும் வெள்ளை பிரதரத்தில் லோஹபஸ்ம ஸாரஸத்துடனும், ஸங்கிபாதத்திலுண்டான பிரலாபத்துடன் கூடிய கம்பவாதத்தில் ரஸஸிந்தூரம் கர்பூரத்துடனும், காயம் வெளிவராமல் மூச்சு திணறலுடனிருக்கிற சுவாஸ ரோகங்களில், டங்கணம், அப்ரகம், வம்சலோசன இவைகளுடனும், ஹிஸ்டிரியாவில் ஸ்வர்ணபஸ்மத்துடனும், ஏற்றைத்தலைவலி, ஸைர்யாவர்த்தம் முதலியதில் வெள்ளி ஸ்வர்ணமாக்ஷிக பஸ்மங்களுடனும் கொடுக்கலாம்.

ஓர் வேண்டுகோள்.

(பண்டிட் நாராயணய்யங்கார், மதுரை)

திராவிட ஆயுர்வேத மகாமண்டலத்தின் 14-வது ஸம்மேளனம் வருகிற கவம்பர்மாதத்தில் நடைபெற முஸ்தீப்புகள் இப்பொழுதே ஆரம்பமாகி வருவதாக அறிகிறேன். சம்மேளனத்தின் தலைவரைத் தேர்ந்தெடுக்கவேண்டும். ஆயுர்வேதத்தில் ஆழ்ந்த படிப்பும் சிரத்தையும் ஊக்கமுமுள்ள ஒருவரைத் தலைவராகத் தேர்ந்தெடுக்க வேண்டிய பொறுப்பு அங்கத்தினர்களைச் சேர்ந்ததாகும். வே குணங்கள் பூர்ணமாக அமையப்பெற்றவர் நமது திருச்சி வைத்ய வாசஸ்பதி V. B. நடராஜ சாஸ்திரிகள் அவர்கள் என்பதை நான் அதிகம் வற்புறுத்திக் கூறத்தேவையில்லை. ஏற்கனவே அவர்கள் தலைமையில் மண்டலம் அபிவிருத்திக்காக சில காரியங்கள் யோசிக்கப்பட்டுள்ளன. அவைகளைப் பூர்த்திசெய்ய அவர்களுக்குப்போதிய அவகாசம் கொடுக்கவேண்டிய அவசியமாகும். ஆகவே அவர்கள் தற்காலம் ஆரம்பித்த காரியங்கள் இடையூறின்றி நடைபெற இவ்வருஷமும் அவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவது அவசியம். அதற்கு மண்டல விதிகள் இடம் கொடாமலிருந்தால் அதைத்திருத்தி அமைக்கவேண்டியது அவசியம். அகில பாரத ஆயுர்வேத மகாமண்டலத்தில் ஒருவரே தொடர்ச்சியாக மூன்றுதடவை தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதை கவனிக்கவேண்டும். அவ்விதமே நமது மண்டலத்திலும் நடைபெறுவது ஒழுங்கினமாகாது. ஆகவே அங்கத்தினர்கள் இதை மனதில் கொண்டு வருகிற எலெக்ஷனில் ஸ்ரீ சாஸ்திரிகள் அவர்களையே தேர்ந்தெடுக்கும்படி வேண்டுகிறேன்.